(இ) முன்னறிதல் படிப்பின் குறிக்கோள்கள் பின்வருவனவாகும் :—

(1) புதுமுறையில் பள்ளிகளை மேற்பார்வையிடுதல், கண்காணித்தல், நுட்பங்களையும் நெளிவு சுளுவுகளையும் ஆய்வாளர்கள் அறிந்து கொள்ளுதல்.

(2) அவர்களின் பணி குறித்து முழுமையாக ஆய்வாளர்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இருத்தல்.

(3) பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் திறனை வளர்ப்பதற்கு ஆய்வாளர்களுக்குத் துணையாக இருத்தல் ;

(4) அவர்களின் தொழிலில் மேற்கொண்டும் முன்னேற்றம் காண அவர்கள் பணியுடன் தொடர்புள்ள பகுதிகளை அறிந்து கொள்வதில் ஆய்வாளர்கள் திறமை எய்த உதவுதல்.

THIRU K. VINAYAKAM : How many Deputy Inspectors of Schools are being given this kind of induction course per year?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எத்தனை ஆண்டுகளுக்கு என்று தெரியவில்லை. 49 டெபுடி இன்ஸ்பெக்டர்களுக்கு அப்படிப்பட்ட டிரெயினிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ சீனிவாசன் : இந்த நிறுவனம் எத்தனை ஆண்டுகளாகச் செயல்பட்டுவருகிறது? டெபுடி இன்ஸ்பெக்டர்களுக்குப் பயிற்சி தருவதைத் தவிர வேறு முறையிலும் செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல பணிகள் இருக்கின்றன. என்ன என்ன பணிகள் என்ற விவரம் தற்பொழுது என்னிடத்தில் இல்லை.

THIRU T. MARTIN : May I know whether these is any proposal pending before the Government to bring in legislation to give statutory force to the Madras Educational Rules and the rules relating to elementary education?

THE HON. THIRU S. MADHAVAN : I have no information.

THIRU K. VINAYAKAM : Is the Government aware of the fact that the entire expenditure incurred on this institution is met by the Central Government and not by the State Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்தச் செலவுகளை மத்திய சர்க்கார் ஏற்கிறது, நம்முடைய சர்க்கார் எதை ஏற்கிறது என்ற விவரம் எல்லாம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

பழனி தேவஸ்தானத்தில் பெண்கள் கல்லூரி

* 195 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தேவஸ்தானத்தில் பெண்கள் கல்லூரி ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

1969 மார்ச் 6]

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தானத்திற்கு ஏராளமான வருவாய் வருகிறது. அதைக்கொண்டு ஆண்கள் கல்லூரி, இசைக் கல்லூரி எல்லாம் நடத்தப்படுகின்றன, அதைப்போல பெண்களுக்கும் கல்லூரி ஏற்படுத்த இனியாவது ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெண் கல்வியின்மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுள்ள அக்கறை மகிழ்ச்சிக்குரியதாகும். இதை நம்முடைய அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் அவர்களிடம் கோரினால் நிதி நிலைமையை எதிர்பார்த்து அந்தக் கோரிக்கை கவனிக்கப்படும்.

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதியில் சிமிட்டித் தொழிற்சாலை.

*** 196 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை தலுக்காவில் சிமிட்டித் தோழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அம்மாதிரி செயற்குறிப்துவும் பெஅரசாங்கத்திடம் இல்லை.

உய்யக் கொண்டான் ஆற்று நீர்.

*** 197 வினா—வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

திருச்சி உய்யக்கொண்டான் ஆற்றில் இரு போக சாகுபடி செய்ய சௌகரியமாக தண்ணீரை ஜூன் முதல் வாரத்தில் திறந்துவிட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தற்போது உய்யக்கொண்டான் ஆற்றிலிருந்து தண்ணீர் முன்பாக வந்தால் தான் சௌகரியமாக இருக்கும். ஏற்கனவே தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்கின்றன. எனவே, சீக்கிரமாகத் தண்ணீர் திறந்துவிட்டால் குறுவை பயிர் விளையச் செய்ய லாயக்காக இருக்கும். எனவே, இந்த ஆண்டாவது முன்பாகவே தண்ணீர் திறந்துவிட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இவ்வாய்க்காலை இயல்பாக மூடும் தருவாயிலும் ஜூன் முதல் வாரத்தில் பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது இயலாது. எனவே ஜூன் மாதத்திற்கு முன்பு விடுவது சாத்தியமல்ல.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, உய்யக்கொண்டான் ஆற்றில் அங்கே உள்ள ஒரு சாராயத் தொழிற்சாலையிலிருந்து கழிவு நீர் விடப்படுவதால் ஆயிரக்கணக்கான எக்கர் நிலம் பாதிக்கப்பட்டு கால்நடைகளுக்கு வியாதிகள் வருவதால் அதை நிறுத்த வேண்டுமென்று அந்தப் பகுதி திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் போராட்டம் நடத்தி எப்படியாவது அதை நிறுத்த வேண்டுமென்று மனு அனுப்பியுள்ளார்கள். அந்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் போராட்டம் நடத்திய அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்கிறாரா அல்லது அந்த ஆலை நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறாரா ?

திரு. ஆர். கருப்பையா : கழிவு நீர் ஆலையிலிருந்து ஆற்றில் விடப்படுவதால் ஆலை நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு சுகாதாரத் துறையின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.